மானியக் கோரிக்கை 60. பல்வகை மூலதனச் செலவு.

1993-94 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இது ஒரு கூட்டு மானியக் கோரிக்கையாகும். எழுது பொருள் அச்சுத்துறை, கல்வி, விளையாட்டுகள், கலை மற்றும் பண்பாடு, வீட்டு வசதி, செய்தி - விளம்பரம், ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், சமூகப் பாதுகாப்பும் நலனும், சத்துணவு, ஏனைய சமூகப் பணிகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை வளர்ச்சி, மீனளம், உணவு சேமிப்பு - கிடங்கு வசதி, கூட்டுறவு, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், சாலைகள்-பாலங்கள், சுற்றுலா ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

பல்வேறு துறைகளின் வருவாய்க் கணக்கில் செலவு குறித்த மானியக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கையில் பல்வேறு துறைகளுக்கு நிதியுதவி அளிப்பதன் பின்னணியில் உள்ள பொதுவான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பு, இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கியமான நிதியொதுக்கங்களை மட்டுமே குறிப்பாகக் கோடிட்டுக்காட்டுகிறது. பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த நிலையினைச் சமர்ப்பிக்கையில் இந்த நிதியொதுக்கங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியொதுக்கங்கள் தொடர்பாகப் பெருந்தலைப்பு வாரியாகத் தனித் தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

கணக்குத் தலைப்பு	1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு	1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)
	(மொத்தச்செலவு ரூபாய் இலட்சத்தில்)		
4058. எழுதுபொருள் அச்சுத் துறைகுறித்த மூலதனச் செலவு	11.00	15.00	4,11.00
4070. ஏனைய நிருவாகப் பணிகள்குறித்த மூலதனச் செலவு	20.00	25.00	—
4202. கல்வி,விளையாட்டுக்கள், கலைமற்றும் பண்பாடு குறித்த மூலதனச் செலவு	0.01	0.01	0.01
4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு	3,44.00	3,35.00	3,00.00
4220. செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு	0.01	3,93.00	0.02
4225. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்குறித்த மூலதனச் செலவு	8,25.00	9,50.00	12,36.00
4235. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்தமூலதனச் செலவு	13.00	28.00	12.00

(1)	(2)	(3)	(4)
4236. சத்துணவு குறித்த மூலதனச் செலவு	35.00	67.00	50.00
4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்தமூலதனச் செலவு	8,15.00	5,08.00	5,86.00
4403. கால்நடை வளர்ப்ப குறித்தமூலதனச் செலவு	0.04	0.04	0.04
4404. பால் பண்ணை வளர்ச்சி குறித்தமூலதனச் செலவு	..	..	18.00
4405. மீனளம் குறித்த மூலதனச் செலவு	1,13.00	1,73.00	1,57.00
4408. உணவு சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு	50.00	50.00	50.00
4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு	1,98.00	5,44.00	4,61.00
4711. வெள்ளக் கட்டுப் பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	57.00	58.00	59.00
5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	4.00	9.00	0.13
5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு	14.00	39.00	29.00
5465. பொது நிதியுதவி வர்த்தக நிறுவனங்களில் மூதலீடு	—	4.00	—
5475. ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	1.00	1.00	1.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

சில முக்கியத் திட்டங்களும் அவற்றிற்கு இம்மானியக் கோரிக்கையின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எழுது பொருள் அச்சுத் துறை

சென்னை, அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்துவதற்காக இயந்திரங்களை வாங்குவதற்கு ரூபாய் *400.00* இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்:

ஆதி திராவிடர் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக *1993-94* ஆம் ஆண்டிற்கு ரூ.*154.80* இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர் இல்லங்கள் கட்டுதல்:

ஆதி திராவிடர்களுக்கான அரசு மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக *1993 - 94* வரவு - செலவுத் திட்டத்தில் ரூபாய் *300* இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன முதலீடு.

வங்கிகள், ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் அளிக்கும் கடன் வசதிகளை பயன்படுத்தி ஆதி திராவிடர்கள், தங்கள் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில், அவர்கள் செலுத்த வேண்டிய தொடக்க நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இச்செயல் நோக்கத்திற்காக, *1993 - 94* ஆம் ஆண்டிற்கு ரூபாய் *650* இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகை.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 1993 - 94 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகைக்காக ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கழகம், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உயரளவு ரூ.3.00 இலட்சம் என்பதற்குட்பட்டுத் திட்டச் செலவில் 20 சதவீதம் வரையில் தொடக்க நிதியுதவி அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள், திட்டச் செலவில் எஞ்சியுள்ள 80 சதவீதத் தொகையை, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும்/கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் கடனாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இக்கழகம், தொடக்க நிதியுதவிக் கடன்களுக்காக மிகச் சொற்ப அளவில் வட்டி விதிக்கிறது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தேசிய நிதியுதவி மேம்பாட்டுக் கழகத்தின் குறிக்கோள்களின் அடிப்படையில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் நோக்கத்தையும், நடவடிக்கைகளையும் சீரமைக்கவும், விரிவுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சமூகப் பாதுகாப்பும் நலனும்

அரசினர் பார்வையற்றோர், காதுகேளாதோருக்கான பள்ளிக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூபாய் 12.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சத்துணவு

சிடா (SIDA) நிதியுதவி பெறும் குழந்தைகள் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்ட வட்டாரங்களிலுள்ள குழந்தைகள் நல மையங்களுககுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய சமூகப் பணிகள்

அரசுத் தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரூபாய் 24.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்

1993 - 94 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ரூபாய் 548.80 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது:-

	(ரூபாய் இலட்சத்தில்)
1. சாதனங்களை நவீனமயமாக்குதல்	3,07.00
2. சாதனம் பராமரிப்புப் பிரிவுகள்	11.96
3. ஒலி, ஒளிச் சாதனங்கள்	3.06
4. தொழிற் பயிற்சி நிறுவனங்களை விரிவுபடுத்தல்	87.25
5. அடிப்படைப் பயிற்சி நிலையங்களையும் அவற்றோடு தொடர்புடைய பயிற்சி நிலையங்களையும் ஏற்படுத்தல்	30.95
6. வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டத்தை விரிவுபடுத்தல்	24.38
7. மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்	84.20
மொத்தம்	5,48.80

மேற்சொன்ன செலவை, மாநில அரசும், மத்திய அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மீனளம்

உள்நாட்டு மீனளம்

மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளுக்காக ரூபாய் 73.72 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மீன் பிடி துறைமுகமும், பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளும்:

மீன்பிடி துறைமுகங்களின் மேம்பாட்டுக்காகவும், பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளின் மேம்பாட்டுக்காகவும், நிலங்களைக் கையகப்படுத்துவதற்காகவும் ரூபாய் 68.09 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் சேமிப்பும், கிடங்கு வசதியும்

நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் 50 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு

1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஊரகக் கிடங்குகள் 50-ம், விற்பனைக் கிடங்குகள் 5-ம் கட்டுவதற்காக, (தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு மூலதன வகையில்), ரூபாய் 72.23 இலட்சமும் (மாநிலப் பங்கு மூலதன வகையில்) ரூபாய் 57.79 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

காமராஜர், தென் ஆர்க்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 313.99 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம், நவீன சில்லறை விற்பனைப்பிரிவுகளை ஏற்படுத்தப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பங்கு மூலதன உதவித்தொகையாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

கடல் அரிப்பு பாதிப்புள்ள மீனவர் குப்பங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக, 1993-94 ஆம் ஆண்டு ரூபாய் 59.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா

மாவட்டச் சுற்றுலா மையங்களின் மேம்பாட்டுக்கு ரூபாய் 5.00 இலட்சமும், உணவுக் கலை நிறுவனத்திற்கு நிதியுதவியளிக்க ரூபாய் 10.00 இலட்சமும், சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 13.40 இலட்சமும் 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS